# As part of Vigilance Week, govt. organisations take integrity vow

**The Hindu Bureau**
PUDUCHERRY

Various government organisations took the integrity vow as part of the Vigilance Awareness Week celebrations on Monday.

At the Raj Nivas, Lt. Governor K. Kailashnathan administered the 'Integrity Pledge' to staff.

Chief Secretary Sharat Chauhan administered the pledge at the Secretariat.

Rakesh Aggarwal, Director; L.N. Dorairajan, Medical Superintendent; and Ravikumar Chittoria, Acting Dean (Academic) administered the pledge at different venues on Jipmer campus to officers, doctors, staff and students.



Lt. Governor K. Kailashnathan administering the pledge at Raj Nivas on Monday. SPECIAL ARRANGEMENT

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
29.10.2024 (செவ்வாய்க்கிழமை)

## லஞ்ச ஒழிப்பு விழிப்புணர்வு வாரம்:

# கவர்னர் மாளிகை, தலைமை செயலகத்தில் உறுதிமொழி ஏற்பு

புதுச்சேரி, அக்.29-

நாடு முழுவதும் லஞ்ச ஒழிப்பு விழிப்புணர்வு வாரம் அக்டோபர் கடைசி வாரம் கடைபிடிக்கப்படுகிறது. இதையொட்டி புதுச்சேரி கவர்னர் மாளிகையில் நடந்த நிகழ்ச்சியில் லஞ்ச ஒழிப்பு மற்றும் நேர்மைக்கான உறுதிமொழி ஏற்கப்பட்டது. இதில் கவர்னர் கைலாஷ்நாதன் உறுதிமொழியை வாசிக்க, அரசு அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் உறுதிமொழியை எடுத்துக்கொண்டனர். இதில் கவர்னரின் செயலாளர் நெடுஞ்செழியன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

புதுவை தலைமை செயலகத்தில் நடந்த நிகழ்ச்சியில் தலைமை செயலாளர் சரத் சவுகான் கலந்துகொண்டு லஞ்ச ஒழிப்பு உறுதிமொழி வாசித்தார். இதில் அரசு செயலாளர்கள் மற்றும் அதிகாரிகள் கலந்துகொண்டு உறுதி மொழி எடுத்தனர்.

கோரிமேடு ஜிப்மர் ஆஸ்பத்திரியில் அதன் இயக்குனர் ராகேஷ் அகர்வால் தலைமையில் பொறுப்பு முதல்வர் டாக்டர் ரவிக்குமார் மற்றும் அதிகாரிகள், ஊழியர்கள், மாணவர்கள் உறுதிமொழி ஏற்றனர்.

தினமலர்
புதுச்சேரி | செவ்வாய் | 29.10.2024

# லஞ்ச ஒழிப்பு வாரம் ஜிப்மரில் உறுதிமொழி



■ லஞ்ச ஒழிப்பு விழிப்புணர்வு வாரத்தினையொட்டி ஜிப்மரில் உறுதிமொழி ஏற்பு நடந்தது.

**புதுச்சேரி, அக். 29–**

லஞ்ச ஒழிப்பு விழிப் புணர்வு வாரத்தினை யொட்டி ஜிப்மரில் உறு திமொழி ஏற்பு நிகழ்ச்சி நடந்தது.

ஜிப்மர் மருத்துவமனை யில் லஞ்ச ஒழிப்பு கண் காணிப்பு விழிப்புணர்வு வாரம் அக்.28 ம் தேதி முதல் நவ.3ம் தேதி வரை கடைபிடிக்கப்படுகின்றது.

முதல் நாளான நேற்று உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடந்தது. ஜிப்மர் இயக் குனர் ராகேஷ் அகர்வால் தலைமையில் அனைத்து ஊழியர்கள் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

இதேபோன்று, மருத் துவ கண்காணிப்பாளர் துரைராஜன் தலைமையில் மருத்துவமனையிலும், ஜிப்மர் முதல்வர் ரவிக்கு மார் சிட்டோரியா தலை மையில் கல்வி மையத்தி லும் உறுதிமொழி ஏற்பு நடந்தது.

இதில் அனைத்து அதிகா ரிகள், ஊழியர்கள், மாண வர்கள் கலந்து கொண்டு, தமிழ், ஹிந்தி, ஆங்கிலத் தில் உறுதிமொழியை ஏற் றனர். லஞ்ச ஒழிப்பு வாரத் தினையொட்டி ஜிப்மர் வளாகம் முழுவதும் விழிப் புணர்வு பதாகைகள் வைக் கப்பட்டுள்ளன.